<u>1 கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி</u>

<u>O.S.No.532/15</u>

14.11.2023. வா.சா. 1 திரு.செந்தில்குமார்

<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. தாவா ொத்தின் பழைய டவுண் சர்வே எண்.549/16 என்றால் சரிதான். சர்வே எண் 549/16 என்பது தற்போது புதிய டி.எஸ்.எண்.72, 73, 76 என பிரிந்துள்ளது என்றால் சரிதான். அந்த 3 சர்வே எண்கள் தவிர வேறு சொத்துகளில் எங்களுக்கு உரிமையில்லை என்றால் சரியலல். சர்வே எண் 74, 75 ஆகியவை எனக்கு பாத்தியப்பட்டது. தாவா சொத்து எப்படி என் தந்தைக்கு பாத்தியப்பட்டது என்றால் என் தந்தையின் தந்தை செல்லையாநாடார் என்பவரிடமிருந்து வாரிசு அடிப்படையில் என் தந்தைக்கு கிடைத்தது.
2. செல்லையா நாடார் தாவா 1ம் தபசில் 1ம் அயிட்ட சொத்தை என் தந்தைக்கு கிரைய ஆவணம் ஏற்படுத்தி கொடுத்தாரா என்றால் ஏற்பாடு ஆவணம் எழுதி கொடுத்தார். 1ம் தபசில் 2ம் அயிட்ட சொத்து என் பெரியப்பாவிற்கு என் தாத்தா எழுதி கொடுத்தார் என்றால் சரிதான். என் பெரியப்பாவின் 3 மகன்களிடமிருந்து மேற்படி சொத்தை நாங்கள் கிரையம் பெற்றோம். தாவா 1ம் தபசில் 1ம் அயிட்ட சொத்திற்கும் பிரதிவாதிகள் வீட்டுக்கு வடக்கே உள்ளது தான் தாவா சொத்து என்றால் சரிதான்.
3. 1ம் தபசில் 1ம் அயிட்ட சொத்தின் முகப்பிலிருந்து தென்வடல் அளவு 27, கிழமேல் 17.5 அடி. வா.சா.ஆ.2 படி தான் 1ம் தபசில் 1ம் அயிட்ட சொத்தில் உரிமை கோருகிறேன் என்றால் சரிதான். அதில் தென்வடல் அளவு 22 அடி என கூறப்பட்டுள்ளது என்றால் வீடு 22 அடி நடைபாதை 3.75 அடி. நடைபாதை குறித்து வா.சா.ஆ.2 கூறப்படவில்லை என்றால் சரிதான். 1ம் தபசில் 1ம் அயிட்ட, 2ம் அயிட்ட சொத்துக்களில் கிழமேல் அளவு என்னவென்றால் 40 அடி இருக்கும்.

4. நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தை பார்வையிட்டார் என்றால் சரிதான். 1ம் தபசில் 1ம் அயிட்ட சொத்தின் மேல் பக்கத்தில் தான் 1ம் தபசில் 2ம் அயிட்ட சொத்து அமைந்துள்ளது என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் மேற்படி சொத்துகளின் கிழமேல் அளவு 45.3 அடி இருப்பதாக அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். 1, 2 அயிட்ட சொத்துகளுக்கு கீழ் பக்கம் கிழமேலாக 12 அடி , தென்வடல் 22 அடி ஆக்கிரமித்து புதிதாக கட்டிடம் கட்டியுள்ளதாக அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் அது என் தாத்தாவிற்கு பாத்தியப்பட்ட சொத்தாகும். மேற்படி விவரத்தை எனது பிராதில் மற்றும் நிருபண வாக்குமூலத்தில் கூறவில்லை என்றால் சரிதான்.

5. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு வழக்கறிஞர் அறிவிப்பு வா.சா.ஆ. 9 நில அளவையருக்கு கொடுத்தேன் என்றால் சரிதான். அதில் தாவா சொத்து அமைந்துள்ள பகுதியில் உள்ள சொத்தின் உரிமையாளர்களின் பத்திரத்திலுள்ள அளவு ஸ்தலத்தில் இல்லை என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். அந்த அறிவிப்பில் நீதிமன்றத்தில் வழக்கு தொடர உள்ளதாகவும் எனவே நிலத்தை அளக்க கூடாது என கூறியுள்ளேன் என்றால் சரிதான்.

6. தாவா முடுக்கிற்கு தெற்கே யாகோப்ப நாடார் என்பவர் 1980ல் வீடு கட்டினார் என்றால்சரிதான். அது கான்கீரிட் மற்றும் ஓலை குடிசை வீடு. 1ம் அயிட்ட சொத்துக்கும் 2ம் அயிட்ட சொத்திற்கும் வடக்கே தென்வடல் 3 அடி அகலமுள்ள காலி மனை உள்ளது என்றால் சரிதான். என் வீட்டிற்கு வடக்கே யார் உள்ளார் என்றால் ராமசாமி, ராமஜெயம் ஆகியோர் வீடு உள்ளது. தென்வடல் 3 அடி அகலமுள்ள காலி மனையில் எனக்கு உரிமையில்லை என்றால் 1.5 அடி சொத்து எனக்கு பாத்தியப்பட்டது.

7. என் தாத்தா என் தந்தைக்கு எழுதி கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணம் வா.சா.ஆ.1ல் ராமசாமி ராமஜெயம் மனை வீட்டிற்கு தெற்கு என கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். 1.5 அடி அவர்களுக்கு சொந்தமானது. என் தாத்தா என் பெரியப்பாவிற்கு எழுதி கொடுத்த வா.சா.ஆ.2 த்தில் ராமசாமி ராமஜெயம் மனை வீட்டிற்கு தெற்கு என கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.3 ல் வடக்கு எல்லைகாக ராமசாமி ராமஜெயம் கட்டிட பொது சுவர் என கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் அது தவறாக எழுதப்பட்டுள்ளது.

8. வா.சா.ஆ.4 கிரைய ஆவணம் வடக்கு எல்லைகாக ராமசாமி ராமஜெயம் கட்டிட பொது சுவர் என கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் அது தவறாக எழுதப்பட்டுள்ளது. வா.சா.ஆ.1 முதல் 4 ஆவணங்களில் வடக்கு எல்லைக தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பிராது 1, 2 அயிட்ட சொத்துக்களுக்கு வடக்கு பக்கம் உள்ள காலி மனையை நோக்கி எனது வீட்டின் சன்னல்கள் மற்றும் சன்சைட் அமைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

9. அந்த காலிமனையில் தான் மழை நீர் குழாய்கள் அமைக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பாதாள சாக்கடையில் மழை நீர் செல்லுகிறது. நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தை பார்வையிட்டு கழிவு நீர் செல்லும் குழாய்கள் வீட்டின் வடக்கு பக்கம் சுவற்றை ஒட்டி காணப்பட்டதாக அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். தாவா முடுக்கிற்கு தெற்கே பிரதிவாதியின் ஓடு கூரையிட்ட வீடு உள்ளது என்றால் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு வரை கிடையாது வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு ஓட்டு கூரை அமைத்தனர். அதனால் வழக்கு தாக்கல் செய்தோம். மேற்படி விவரங்கள் பிராதில் கூறவில்லை என்றால் சரிதான்.

10. ஓலை கூரையை மாற்றியதாக பிராதில் கூறவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் வீட்டின் மழை நீர் தாவா முடக்கில் விழுந்து தான் செல்ல வேண்டும் என்றால் அவ்வாறு கட்சி செய்வது தான் சச்சரவு ஆகும். தாவா முடுக்கில் பிரதிவாதியின் வீட்டின் ஓட்டு கூரை 1.5 அடி நீளம் தென்வடலாக நீண்டு காணப்படுகிறது என்றால் சரிதான். கிழமேல் 10 அடி என்றால் 13 அடி.பிரதிவாதி வீட்டின் சன்னல்கள் தாவா முடுக்கை பார்த்த படி உள்ளது என்றால் சரிதான். சம்மனுசு என்பவர் என் தந்தையிடம் அனுபவதி பெற்று கட்டினார்.

11. அந்த விவரத்தை பிராதில் கூறவில்லை என்றால் சரிதான். சன்னல்களின் சன்சைடு தென்வடலாக 1.5 அடி மற்றும் 2.5 அடி முடுக்கில் நீண்டு காணப்படுகிறது என்றால் அது இடைஞ்சலாக இருப்பதாக நாங்கள் கூறினால் அதை அகற்ற 2ம் பிரதிவாதி சம்மதித்து கட்டினார். பிரதிவாதி வீட்டின் வடக்கு சுவருக்கு முடுக்கு வழியாக தான் வெள்ளை அடிக்க முடியும் என்றால் அந்த முடுக்கை எங்களை தவிர் வேறு யாரும் பயன்படுத்தியது கிடையாது.

12. 2 வாரத்திற்கு முன்பு முடுக்கில் கதவு அமைத்தோம் என்றால் சரியல்ல. அது என் தாத்தா காலத்திலே அமைக்கப்பட்டது. 2 வாரத்திற்கு முன்பு எந்த வாசலும் அமைக்கவில்லை. என் கட்சி படி தென்வடல் 22 அடி மற்றும் 3 அடி பாதை உரிமையுள்ளது என்றால் நடைபாதை 3.75 அடி. பிராதில் நடைபாதை 3 அடி அகலம் என கூறியுள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 மற்றும் 2 ஆவணத்தில் 3 அடி அகலமுள்ள பாதை என கூறப்பட்டுள்ளது சரிதான்.

13. என் நிலம் ராமசாமி ராமஜெயம் வீட்டிற்க தெற்யிருந்து 25 அடிகள் அகலத்திலுள்ளது என்றால் சரியல்ல. தாவா முடுக்கு பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்றும் அதை நாங்கள் ஆக்கிரமிக்க முயற்சி

செய்கிறோம் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் ஆக்கரமிப்பு செய்துள்ளார்கள். எந்த தேதியில் ஆக்கிரமிப்பு செய்தார்கள் என பிராதில் கூறவில்லை என்றால் 2015 ல் ஆக்கிரமிப்பு செய்தார்கள். 1980 ல் கட்டப்பட்ட ஓட்டு வீடு என்பதால் ஆக்கிரமிப்பு தேதி குறிப்பிடாமல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

14. வா.சா.ஆ.1 மற்றும் 2 தென்வடல் 26.75 அடி இருப்பதாக கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். பிராதில் 27.75 அடி இருப்பதாக கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த ஒரு அடி வித்தியாசம் இருப்பதற்கு ஆவணங்கள் ஏதுவும் கிடையாது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 நடைபாதையில் கிழமேல் 39 அடி என கூறப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 45 அடி. அந்த 6 அடி வித்தியாசத்திற்கு எந்த ஆவணமும் கிடையாது என்றால் சரியல்ல.

15. தாவா முடுக்கில் எந்த உரிமையும் கிடையாது என்றும் நான் எனது ஆள்பலத்தை வைத்து பிரதிவாதியின் சொத்தை ஆக்கிரமிக்க முயற்சி செய்கிறேன் என்றால் சரியல்ல. பிராது பரிகாரம் கிடைக்கக்கூடியதல்ல என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த ஆவணங்கள் மோசடியானது என்றும் அதில் உள்ள எல்லை மால்கள் மற்றும் அளவுகள் தவறு என்பதால் அதன் அடிப்படையில் வழக்கு தொடர உரிமையில்லை என்றால் சரியல்ல.